செய்தி வெளியீடு எண் : 702 நாள் : 13.04.2023

**செய்தி வெளியீடு**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்**

**காது கேளாதவர்களுக்கான 8 வது ஜூனியர் மற்றும் 25 வது சீனியர் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற வீரர்– வீராங்கனைகள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை இன்று (13.04.2023) தலைமைச் செயலகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.**

மத்திய பிரதேச மாநிலம், இந்தூரில் 2023 பிப்ரவரி 15–ம் தேதி முதல் 19–ம் தேதி வரை காதுகேளாதவர்களுக்கான 8–வது ஜூனியர் தேசிய விளையாட்டுப் போட்டி மற்றும் 25–வது சீனியர் தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது.

ஜூனியர் மற்றும் சீனியர் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், நீச்சல், டென்னிஸ், கூடைப்பந்து உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த 150 வீரர்– வீராங்கனைகள் பங்கேற்றனர்.

இதில் பல்வேறு பிரிவு போட்டிகளில் 42–வீரர்–வீராங்கனைகள் 51– தங்கம் 26– வெள்ளி மற்றும் 18– வெண்கலம் என மொத்தம் 95– பதக்கங்களை வென்று சாதனை படைத்தனர்.

இந்த போட்டிகளில் ஒட்டுமொத்த சாம்பியன் ஷிப் தரவரிசையில் தமிழ்நாடு 2–ம் இடத்தை பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டிகளில் பங்கேற்ற அணி வீரர்கள் பலர் மற்றும் நிர்வாகிகள் இன்று (13.04.2023) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. மேகநாத ரெட்டி இ.ஆ.ப., பொது மேலாளர் (நிர்வாகம்) திரு. மணிகண்டன், தமிழ்நாடு காது கேளாதவர்கள் விளையாட்டுக்கழக செயலாளர் பொன்னுசாமி, நிர்வாகி ஷோபனா மற்றும் செய்கை மொழி பயிற்சியாளர் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in